4. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல், பொது நிறுவனங்களின் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. தா. வேடியப்பன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் சார்பாக.

திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக, குழுவின் 282 முதல் 284 வரையிலான 3 அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. எஸ். ஜெயக்குமார், மனுக்கள் குழுவின் தலைவர்.

திரு. எஸ். ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, மனுக்கள் குழுவின் 45 முதல் 47 வரையிலான அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

முற்பகல் 11–50

5. விதி 110-ன் கீழ் பிற்பட்டோர் நலத் துறை அமைச்சரின் அறிக்கை

பிற்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க பிற்பட்டோர் நல ஆணையத்திடம் கோரிக்கை வைப்பது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சரவர்கள் பேரவை விதி 110–ன்கீழ் பேரவைக்கு ஓர் அறிக்கையை அளிக்க அனுமதி கோரியுள்ளார். அவருக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இப்போது அவ்வறிக்கையினைப் பேரவைக்கு அளிப்பார்.

***மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தற்போது பல்வேறு சமூக அமைப்புகள்

தங்கள் வகுப்புகளைப் பிற்படுத்தப்பட்டோர் அல்லது மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தி பேரணிகள் நடத்தியும், மாநாடுக்ள் நடத்தியும் தீர்மானங்கள் நிறைவேற்றியும் வருகின்றன.

மண்டல் குழு வழக்குகளில் தீர்ப்பினை வழங்கிய இந்திய உச்சநீதிமன்றம் எந்தவொரு வகுப்பினையும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக் கோரும் கோரிக்கையினையும், ஒரு வகுப்பு கூடுதலாக பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டது அல்லது சேர்க்கப்படாமல் விடுபட்டது குறித்த புகார்களையும் பரிசீலித்து அரசுக்குப் பரிந்துரை வழங்க நிலையானதொரு அமைப்பினை மைய அரசும், ஒவ்வொரு மாநில அரசும் ஏற்படுத்த வேண்டும் என்றும், இவ்வமைப்பு பரிந்துரை செய்கிற மனுக்கள் மீது மட்டுமே அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளது.

மண்டல் குழு வழக்குகளில் இந்திய உச்சநீதிமன்றம் பிறப்பித்த மேற்குறிப்பிட்ட ஆணைக்கிணங்க 'தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம்' என்ற நிரந்தர ஆணையம் ஒன்றினை தமிழ்நாடு அரசு 15–3–1993 அன்று ஏற்படுத்தி ஓய்வு பெற்ற நீதியரசர் திரு. கே. சண்முகம் அவர்கள் தலைமையிலும் மேலும் எட்டு உறுப்பினர்களைக் கொண்டும் செயல்பட்டு வருகிறது.

தற்போது ஒரு வகுப்பினை பிற்படுத்தப்பட்டோர் அல்லது மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக் கோரி அரசுக்கு வரும் விண்ணப்பங்கள் குறித்து விரிவான ஆய்வினை மேற்கொண்டு அரசுக்குப் பரிந்துரை வழங்கும் பொருட்டு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையத்திற்கு அவை அனுப்பிவைக்கப்படுகின்றன. ஆணையம் அம்மனுக்கள் குறித்து விரிவான விசாரணை மேற்கொண்டு தங்களது பரிந்துரையினை அரசுக்கு அனுப்பிவைக்கும். பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையத்தின் பரிந்துரையினை பரிசீலித்து அரசு தக்க முடிவினை மேற்கொள்ளும்.

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம் தற்போது பல்வேறு சமூக அமைப்புகள் மற்றும் தனி நபர்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்களை விசாரித்து வருகிறது. 31–12–95 வரை ஆணையம் 111 வகுப்பினர் குறித்து 811 மனுக்களைப் பெற்று அவற்றின் மீது விசாரணை செய்து வருகிறது.

மண்டல் குழு வழக்குகளில் இந்திய உச்சநீதிமன்றம் பிறப்பித்த ஆணையின்படி தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையிலேயே எந்தவொரு வகுப்பினையும் பிற்படுத்தப்பட்டோர் அல்லது மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்ப்பது குறித்து அரசு நடவடிக்கை மேற்கொள்ள இயலும். உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பின்படி பிற்படுத்தப்பட்டோர் நலஆணையத்தின் விசாரணையின்றி அரசு நேரடியாக எந்தவித நடவடிக்கையையும் மேற்கொள்ள இயலாது. எனவே, தங்கள் வகுப்பினை பிற்படுத்தப்பட்டோர் அல்லது மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க விரும்பும் சமூக அமைப்புகள் மற்றும் தனி நபர்கள் தங்கள் மனுக்களை தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நலஆணையத்திற்கு அனுப்பிவைக்கவேண்டும் என்பதனை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

6. இடைக்கால வரவு-செலவுத் திட்டம், 1996-97, பொது விவாதம்-தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1996-97 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தின் மீதான பொது விவாதம். பேசுகின்ற ஒவ்வொரு உறுப்பினருக்கும் சரியாக 10 நிமிடங்கள் வழங்கப்படும். குறுக்கீடுகள் இருந்தாலும், அது அந்தந்த உறுப்பினர்களைச் சேர்ந்தது. எனவே, 10-வது நிமிடத்தில் அவர்கள் உரையை முடித்துக் கொள்ள வேண்டும் என்பதைக் கண்டிப்பாகத் தெரிவித்துக் கொள்கிறேன். திரு. பி.வி. இராஜேந்திரன்.

திரு. பி.வி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் நாவலர் அவர்கள் பத்தாவது சட்டமன்றக் கூட்டத் தொடரில் இந்த சட்டமன்றத்தினுடைய இறுதிக் கூட்டத்தில் இடைக்கால நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்திருக்கின்றார்கள். அதிலே நாங்கள் முக்கியமாகப் பார்த்தது எல்லாம் ஆளுங்கட்சி கடந்த ஐந்து ஆண்டுக் காலத்தில் எப்படியெல்லாம் நாடாளுமன்ற ஜனநாயக பாரம்பரியத்தைக் கட்டிக் காத்திருக்கிறது, மக்களுக்கு நல்வாழ்வைத் தந்திருக்கிறது என்பதையெல்லாம் நாங்கள் இந்த நேரத்திலே சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)